# புதுச்சேரி ஆய்வு அறிக்கை -2018

*(புதுச்சேரி அரசின் ஆட்சிமுறை செயலாக்கம் மற்றும் வாக்காளர்களின் முன்னுரிமைகள்/ பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு )*

ஜனநாயக சீர்திருத்தச் சங்கத்தின் ஆய்வறிக்கை

**Association for Democratic Reforms**
T-95, C.L. House, 2nd Floor,
Gulmohar Commercial Complex Gautam Nagar,
New Delhi-110049
Phone: +91-011-41654200
Fax: +91-11-46094248

**புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம்**
**மனை எண். 106, எம்.ஜி.ஆர். நகர்**
**100 அடி சாலை, புதுச்சேரி - 605004**
**மின்னஞ்சல்: hopeindia1996@gmail.com**
**கைப்பேசி: 9486086938**

## அறிமுகம் மற்றும் ஆராய்ச்சி-முறை

ஜனநாயக சீர்திருத்தச் சங்கம்(ADR ) மற்றும் RA Asterisc Computing & Data Solutions Pvt. Ltd. (RAAC) இதுவரை அநேகமாய் எந்த ஒரு நாட்டிலும் அல்லாத ஒரு மிகப்பெரிய வாக்காளர் ஆய்வு செய்துள்ளது. இந்த அனைத்து இந்திய ஆய்வானது 534 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் 2,73,487 வாக்காளர்கள் பங்கு பெற, அனைத்துத் தரப்பு மக்களினிடையே நடத்தப்பட்டது. இந்த மதிப்பாய்வின் மூன்று பிரதான குறிக்கோள்கள் கீழ்க்கண்டவற்றைக் கண்டறிவதற்காகும்: (i) குறிப்பிட்ட ஆட்சி விவகாரங்களில் வாக்காளர்களின் முன்னுரிமைகள் (ii) அந்த விவகாரங்களில் அரசின் செயலாக்கம் குறித்த வாக்காளர் மதிப்பீடுகள் மற்றும் (iii) வாக்களிக்கும் நடத்தையை தீர்மானிக்கும் காரணிகள். இந்த ஆய்வு, 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன், அக்டோபர் 2018 மற்றும் டிசம்பர் 2018க்கு இடையே நடத்தப்பட்டது.

புதுச்சேரியை கவனிக்கையில், இந்த அறிக்கை புதுச்சேரியின் வாக்காளர்களால் மதிப்பிடப்பட்ட (கேள்வி பதிப்பில் பட்டியலிடப்பட்டுள்ள 31ல்) 10 மிக முக்கியமான ஆட்சிமுறை பிரச்சினைகளைப் பகுத்தாய்வு செய்கிறது. வாக்காளர்களின் இந்த முன்னுரிமைகளில்/முக்கிய-பிரச்சனைகளில் அரசாங்கத்தின் செயலாக்கம், விடையளிப்பவர்கள் பார்வையிலிருந்து மேலும் ஆராயப்படுகிறது. இந்த ஆய்வில், புதுச்சேரி முழுதும் சுமார் 500 பேர் கலந்துகொண்டனர்.

இந்த மதிப்பீட்டின் முக்கிய நோக்கம் அரசிடமிருந்து வாக்காளர்களின் முக்கிய எதிர்பார்ப்புகள் என்ன என்பதையும், அரசின் செயலாக்கத்தை எவ்வாறு மதிப்பீடு செய்கின்றனர் என்பதைப் பற்றிய புரிதலை மேம்படுத்துவது ஆகும். கூடுதலாக, அது சமகாலத்திய ஒரு முக்கிய இடைவெளியை பூர்த்தி செய்ய முயல்கிறது, அதாவது, ஆட்சி மீது ஆதார அடிப்படையான ஆராய்ச்சி மற்றும் நடவடிக்கை. மிக நீண்ட காலமாக நாம் சித்தாந்தங்கள் அல்லது பல்வேறு வல்லுனர்களின் கருத்துக்களின் மீது முற்றிலும்

சார்ந்திருந்திருக்கிறோம். அது முக்கியம் என்றாலும், வாக்காளர்களின் முன்னுரிமைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இந்த முன்னுரிமைகள் மற்றும் மதிப்பீடுகள் காலப்போக்கில் மாறுபடும், எனவே அவ்வப்போது இந்த ஆய்வை திரும்பச் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

**ஆராய்ச்சி வடிவமைப்பு:** கிராமப்புறம்-நகர்ப்புறம், பாலினம், சாதி, மதம், மற்றும் வருவாய் விகிதம் போன்ற பல்வேறு பிரிவுகளிலிருந்து பிரதிநிதித்துவம் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக, ஓரளவு இலக்குடைய மாதிரித்தேர்வு மூலம், 18 வயதிற்கு மேற்பட்ட பலதரப்பட்ட மக்களின் ஒரு பிரதிநிதித்துவ மாதிரி, தேர்வு செய்யப்பட்டது. மாதிரிகள் நடுநிலையானதாகவும் மக்களுடைய முழுமையான பிரதிநிதித்துவம் வாய்ந்ததாகவும் இருக்க முழுமையான கவனம் மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பின் துல்லியம் 95%, அதாவது, உண்மையான மதிப்புகள் கணக்கெடுப்பின் 5% கணிப்புகளுக்குள் இருக்கும்.

## முக்கிய கண்டுபிடிப்புக்கள்

- அதிக வேலை வாய்ப்புகள் (61.97%), மேலான மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள் (54.02%), மற்றும் மேலான சாலைகள் (38.33%) ஆகியவை புதுச்சேரி வாக்காளர்களின் மொத்த முன்னுரிமைகளில் முதல் மூன்று ஆகும் என்று 2018 புதுச்சேரி ஆய்வு காட்டுகின்றது .

- வாக்காளர்களின் பிரதானமான முன்னுரிமைகளில், அதிக வேலைவாய்ப்புகள் விஷயத்தில் அரசாங்கத்தின் செயலாக்கமானது (ஐந்து/5 அளவிலான மதிப்பீட்டில் 2.98), சராசரிக்குக் கீழும், மேலான மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள் (3.02) மற்றும் தரமான சாலைகள் (3.26) என்றவை சராசரிக்கு மேலாகவும் மதிப்பிடப்பட்டன.

- கிராமப்புற புதுச்சேரியில் வாக்காளர்களின் முதன்மை முன்னுரிமைகளாக குடிநீர்(43%), விதை / உரங்களுக்கான மானியம்(42%) ,மேலான மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள்(38%) இருந்தன.
- கிராமப்புற வாக்காளர்களின் பிரதானமான முன்னுரிமைகளில் அரசாங்கத்தின் செயலாக்கமானது குடிநீர் வசதிகள்(ஐந்து/5 அளவிலான மதிப்பீட்டில் 2.84) மற்றும் மேலான மருத்துவமனைகள்/ஆரம்ப-சுகாதார நிலையங்கள்(2.93) சராசரிக்குக் கீழும், விதை/உரங்களுக்கான விவசாய மானியம் விஷயத்தில்(3.21) சராசரிக்கு மேலாகவும் மதிப்பிடப்பட்டன.


- கிராமப்புற புதுச்சேரியில் விவசாயத்திற்கான தண்ணீர் வசதி (2.91) மற்றும் மேலான வேலைவாய்ப்புக்கள் விஷயத்தில் (2.93) அரசாங்கம் மோசமாக செயல்பட்டுள்ளது

- நகர்ப்புற புதுச்சேரியில், அதிக வேலைவாய்ப்புக்கள்(77%), மேலான மருத்துவமனைகள்/ஆரம்ப-சுகாதார நிலையங்கள்(64%) மற்றும் ஒலி மாசுபாடு(52%) ஆகியவை முக்கியமான முன்னுரிமைகள் ஆகும்.


  - நகர்ப்புற வாக்காளர்களின் பிரதானமான முன்னுரிமைகளில் அதிக வேலைவாய்ப்புக்களில் அரசாங்கத்தின் செயலாக்கமானது (5 அளவில் 3.00), மற்றும் மேலான மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்களில் (3.07) மற்றும் ஒலி-மாசுபாட்டில்(3.07) சராசரி, மற்றும் சராசரிக்கு மேலாக முறையே மதிப்பிடப்பட்டன.

- புதுச்சேரி நகர்ப்புற வாக்காளர் முன்னுரிமைகளில் அரசாங்கத்தின் செயப்பாடு சராசரிக்கு மேலாக மதிப்பிடப்பட்டது ஊக்குவிக்கிறது

## I. வாக்காளர்களின் முதல் மூன்று முன்னுரிமைகளில் புதுச்சேரி அரசின் செயலாக்கம் - மொத்தம், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம்





**(வரைபடம் 1: புதுச்சேரி -மொத்த வாக்காளர்களின் முதல் மூன்று முன்னுரிமைகளில் அரசின் செயலாக்கத்திற்கான மதிப்பீடு)**





(வரைபடம் 2: புதுச்சேரி - வாக்காளர் முன்னுரிமைகள் மற்றும் அரசின் செயலாக்கத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற விவரக்கூறுகள்)

## II. புதுச்சேரி கிராமப்புற வாக்காளர் முன்னுரிமைகள் மற்றும் புதுச்சேரி அரசின் செயலாக்கம்





(வரைபடம் 3: புதுச்சேரி கிராமப்புற வாக்காளர்களின் முன்னுரிமைகள்)





Graph 4: Performance of Government on Rural Voters' Priorities in Puducherry

(வரைபடம் 4: புதுச்சேரி கிராமப்புற வாக்காளர் முன்னுரிமைகளில் அரசின் செயலாக்கம்)

## III. புதுச்சேரி நகர்ப்புற வாக்காளர்களின் முன்னுரிமைகள் மற்றும் அரசாங்கத்தின் செயலாக்கம்)




(வரைபடம் 5: புதுச்சேரி நகர்ப்புற வாக்காளர்களின் முன்னுரிமைகள்)



(வரைபடம் 6: புதுச்சேரி  நகர்ப்புற வாக்காளர் முன்னுரிமைகளில் அரசின் செயலாக்கம்)

**வாக்களிக்கும் பாங்கு**

இந்த ஆய்வு வாக்காளர் வாக்களிக்கும் பாங்கில் பின்வரும் அம்சங்களை ஆய்வு செய்ய முயற்சித்தது. (i) வாக்களிக்கும் முறையை தீர்மானிக்கும் காரணிகள், (ii) தேர்தல்களில் போட்டியிடும் குற்றவாளிகளைப் பற்றிய கருத்து, மற்றும் (iii) குற்றம் மற்றும் பணத்தின் பங்கு பற்றிய வாக்காளர் விழிப்புணர்வு

வாக்களிக்கும் விதத்தை தீர்மானிக்கும்  காரணிகளை அடையாளம் காண பின்வரும் கேள்விகள் கேட்கப்பட்டன - "{ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கான காரணங்கள் என்ன?" மற்றும் "ஒரு தேர்தலில், எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பது என்ற முடிவில், யாருடைய கருத்து மிக முக்கியமாக இருந்தது ?"

தேர்தலில் போட்டியிடும் குற்றவாளிகளைப் பற்றிய வாக்காளர்களின் கருத்தைப் புரிந்து கொள்ள, கேட்கப்பட்ட இரண்டு கேள்விகளாவன - "ஒரு குற்றவியல் வழக்கில் சம்பந்தப்பட்ட யாரவது பாராளுமன்றத்தில் அல்லது மாநில சட்டமன்றத்தில் இருக்க வேண்டுமா?" மற்றும் "குற்றவியல் பதிவுகள் உள்ளவர்களுக்கு  மக்கள் ஏன் வாக்களிக்கிறார்கள்?"

குற்றம் மற்றும் பணத்தின் பங்கு பற்றிய வாக்காளர் விழிப்புணர்வு குறித்து மதிப்பீடு செய்யப், பின்வரும் கேள்விகள் கேட்கப்பட்டன - "பணம் / பரிசுகளை விநியோகம் செய்வது சட்டவிரோதமானது என்று உங்களுக்குத் தெரியுமா?", " கடந்த தேர்தலில் உங்கள் தொகுதியில் பணம் / பரிசுகள் / மதுபானம் ஆகியவற்றை விநியோகித்த நிகழ்வுகள் ஏதேனும் அறிவீர்களா?", மற்றும் "வேட்பாளர்களின் குற்றப் பின்னணி குறித்து தகவல்களைப் பெற முடியும் என்று உங்களுக்குத் தெரியுமா? ".

**புதுச்சேரியில் வாக்களிக்கும் விதம் குறித்த முக்கியமான கண்டுபிடிப்புகள்**

- 2018 புதுச்சேரி ஆய்வு அறிக்கையின்படி, அதிகப்படியான சதவிகித வாக்காளர்கள் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கு முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது (முக்கியமானது :46% மற்றும் மிக-முக்கியமானது:33%) மற்றும் வேட்பாளர் எப்படிப்பட்டவர் (முக்கியமானது:67% மற்றும் மிக முக்கியனானது:12%) ஆகியவை மிக முக்கியமான காரணங்களாக உள்ளன என்று கூறியுள்ளனர். இதனைத் தொடர்ந்தது வேட்பாளர்களின் கட்சி (முக்கியமானது: 46% மற்றும் மிக-முக்கியமானது: 21%) .

- ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதற்குப் பணம், மது, பரிசுகள் விநியோகிப்பது முக்கியமான (33%) மற்றும் மிக-முக்கியமான (10%) காரணியாக இருந்தது என 43% வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர்.

- ஒரு தேர்தலில் எந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானிப்பதில், புதுச்சேரி வாக்காளர்களில் 82% தங்களது சொந்த கருத்தே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், 9% தங்களது மனைவி/கணவர் கருத்தும் மற்றும் 3% உள்ளூர் அரசியல் தலைவர் கருத்தும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்தனர்.

- பெரும்பான்மையான (65%) வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பரிசுகள் விநியோகிப்பது சட்டவிரோதமானது என்று தெரிந்திருக்கிறது.

- வாக்குகளுக்காக பணம் மற்றும் இதர பொருட்கள் வாக்காளர்களுக்கு கொடுக்கும்/விநியோகிக்கும் நிகழ்வுகள் பற்றி தெரியும் என்று 39% வாக்காளர்கள் தெரிவித்துள்ளார்கள்


- 99% வாக்காளர்கள் குற்றவியல் பின்னணி உள்ளவர்கள் நாடாளுமன்றத்திலோ, மாநில சட்டமன்றத்திலோ இருக்கக்கூடாது என்று கருதியுள்ளனர்.
- 32% வாக்காளர்கள் மட்டுமே குற்றவியல் ஆவணங்கள் பற்றிய விபரங்களை பெறலாம் என்று அறிந்திருந்தனர்

  - குற்றவியல் பின்னணி இருக்கும் வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க காரணம் அவர்கள் தங்கள் சாதி/மதம் சார்ந்தவர் என்ற காரணம் என 40% வாக்காளர்கள் கருதியுள்ளனர்.

- குற்றவியல் பின்னணி இருக்கும் வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க காரணம் அவர்கள் செல்வாக்குடையவர் என்று 36% வாக்காளர்கள் கருதியுள்ளனர்.


- அப்படிப்பட்ட வேட்பாளர்கள் மற்றபடி நல்ல பணிகள் செய்துவருவதால் மக்கள் வாக்களிப்பதாக 34% வாக்காளர்கள் கருதினர்.

  - வேட்பாளரின் குற்றவியல் பதிவுகள் பற்றி அறியாமல் இருப்பது(34%), இவர்கள் மேல் உள்ள வழக்குகள் தீவிர இயல்பு வாய்ந்தவையாக இல்லாதது(32%), மற்றும் தேர்தலுக்காக தாராளமாக செலவழித்தல்(27%) ஆகியவை மற்ற முக்கியமான காரணிகளாக உள்ளன.





Graph 7: Factors Influencing Voting Behaviour

(வரைபடம் 7: வாக்காளர் நடத்தை தீர்மானிக்கும் காரணிகள்)





Graph 8: In an election, whose opinion mattered the most while deciding which candidate to vote

(வரைபடம்8: தேர்தல் வாக்களிப்பு முடிவுகளில் எவருடைய கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது)




Graph 9: Voter Awareness regarding the Role of Crime and Money in Elections
(வரைபடம் 9: தேர்தலில் குற்றவியல் மற்றும் பணம் பற்றிய வாக்காளர் விழிப்புணர்வு)




Graph 10: Voters’ Opinion regarding Criminal Candidates Contesting in Elections
(வரைபடம் 10: குற்றப் பின்னணி வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவது பற்றிய வாக்காளர்கள் கருத்து)

## **தகவல் அளித்தோர்** விவரங்கள்

- ஆய்வில் பங்கேற்ற வாக்காளர்களில் 39% வாக்காளர்கள் கிராமப்புறத்திலிருந்தும் மற்றும், 61% வாக்காளர்கள் நகர்ப்புறத்திலிருந்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டனர்.
- 66% ஆண்கள் மற்றும் 34% பெண்கள் இருந்தனர்.
- , 78.4% பொது வகுப்பினரும், 15.4% பட்டியல் சாதியினரும், 6.2% இதர பின்படுத்தப்பட்ட சாதியினரும் இருந்தனர்.

பங்கேற்றோர் பற்றிய இதர விவரங்கள் பின்வரும் வரைபடங்களில் காணலாம் -




Graph 11: Voters' Demographic Details

(வரைபடம் 11 : ஆய்வில் பங்கேற்ற வாக்காளர்கள் பற்றிய இதர புள்ளிவிபரங்கள் )

## முடிவுரை

புதுச்சேரி அரசாங்கத்தின் செயலாக்கம் அநேகமான வாக்காளர் முன்னுரிமைகளில் பொதுவாக சராசரி அல்லது சராசரிக்குமேல் மதிப்பிடப்பட்டிருந்தாலும், குடிநீர்-வசதி, அதிக

வேலைவாய்ப்புக்கள் மற்றும் விவசாயத்திற்கு தண்ணீர் வசதி, முதலிய விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டி உள்ளதாக 2018 புதுச்சேரி ஆய்வறிக்கை சுட்டிக் காட்டுகின்றது

அரசியல் பிரதிநிதித்துவம் என்பது அரசியலிலும், ஆட்சியிலும் வாக்களிக்கும் மக்களின் விருப்பங்களுக்கு இடம் கொடுப்பது பற்றியதாகும். இந்த மதிப்பீட்டின் பின்னணியில் இருப்பது நாட்டுமக்கள் எதிர்கொள்ளும் அன்றாட நிதர்சனங்களே. இவைகளைப் பதிவிட்டு, இந்த மதிப்பீடுகளின் அர்த்தம் என்ன என்பதையும் வாக்காளர்கள் அரசை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதையும் நம் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துவே இந்த மதிப்பீடுகள் முயற்சிக்கின்றன.

இந்த மதிப்பீட்டு அறிக்கை அனைத்து நிறுவனங்களிலும் சொந்த அமைப்பு செய்முறைகளை துரிதப்படுத்துதவதற்கும் பிற அமைப்புகளை மேற்பார்வை செய்வதை மேம்படுத்துவதறகும் ஒரு முக்கியமான கருவியாக இருக்கும் என்று ADR நம்புகிறது. நமது வளங்களை மிகவும் துரிதமாக பயன்படுத்தி நாட்டிற்கு சேவை செய்வதற்கு ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை ஆரம்பிப்பதில் இந்த அறிக்கை கருவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## பொறுப்புத் துறப்பு

வாக்காளர்களின் பார்வையில் ஆட்சிமுறையில் முக்கியமான பிரச்சனைகள் எப்படித் தங்களது தினசரி வாழ்க்கையை பாதிக்கின்றன மற்றும் தங்களது அரசாங்கங்கள் இப்பிரச்சனைகளை தீர்ப்பது குறித்து வாக்காளர்கள் எவ்வளவு திருப்தியாக உள்ளனர் என்பதைக் கண்டறியவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வு சிறந்த விஞ்ஞான உத்திகளைக் கொண்டும் அதைத் தொடர்ந்த கண்டுபிடிப்புகளும் அறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட தகவல் ஆய்வு உத்திகளைக் கொண்டும் நடத்தப்பட்டது. இவ்வறிக்கையில் நிறுவப்பட்ட அனுமானங்கள் இந்திய வாக்காளர்கள் அளித்த பதில்களைச் சார்ந்ததாகும்.

இந்த ஆய்வு, வாக்காளர்களின் கோரிக்கைகளுக்கும், அரசாங்கங்களின் செயலாக்காமாக இந்திய வாக்களர்கள் காண்பதற்கும் இடையே உள்ள இடைவெளியை அறிவதற்கான ஒரு முறையான மற்றும் அறிவியல் ரீதியான ஆய்வாகும். இந்த ஆய்வு எந்த ஒரு அரசாங்கங்கத்தையோ, அல்லது அரசியல் கட்சியையோ அல்லது தனிமனிதனையோ அல்லது அமைப்பையோ அல்லது நிறுவனத்தையோ பாராட்டவோ அல்லது மட்டப்படுத்தவோ முயற்சிக்கும் பொருட்டு இல்லை.

இந்த அறிக்கையில் உள்ள அனைத்து விவரங்களும் சரியான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டி அனைத்து முயற்சியும் ADR மேற்கொண்டுள்ளது.

இந்த அறிக்கையை பயன்படுத்துபவரோ அல்லது இவ்வறிக்கையிலிருந்து குறிப்பெடுப்பவரோ, ‘புதுச்சேரி ஆய்வு அறிக்கை - 2018‘ என்ற மூலத்தை குறிப்பிட வேண்டும்.

## To Get Information About Candidates/Parties/MPs/MLAs/ Corporators/PILs in courts

National Election Watch

Give us missed call on: **08010445555**

Toll Free Helpline No: **1800-110-440**

Journalist Helpline no: **8010394248**

Subscribe to ADR on **WhatsApp** for updates: 7840067840

Visit: **www.myneta.info**

Email: **adr@adrindia.org**

Send SMS: **Myneta <pincode or constituency> to 56070 or 9212356070**

To contact ADR State Partners, visit: **https://adrindia.org/about-adr/state-coordinators**

## Social Media

/myneta.info /adrindia.org @adrspeaks /adrspeaks /adrspeaks

https://in.linkedin.com/company/association-of-democratic-reforms-adr-

## Our Websites

**www.adrindia.org**

Provides detailed analytical reports of Lok Sabha, State Assemblies, local body elections & financial reports of political parties & ongoing PILs in courts

**www.myneta.info**

Provides full information of criminal cases, asset, liability and education details declared by candidates in the self sworn affidavits

## Android Apps

**Myneta:** The criminal, financial, educational & other background information self declared by candidates in their affidavits during elections is now available on your mobile phones.

**Election Watch Reporter:** This app provides a tool to the citizens to capture violations of election related laws & the code of conduct.
**Both the applications are available on Google Play Store.**